பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

31 08-2025 SUNDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சூரியசக்தி மின்சாரம் விவசாயிகளின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் கோவில் நிதி சூறையாடப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. ஜவுளி மற்றும் பின்னலாடை தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குறை கூறியுள்ளது.

4. தமிழக காவல்துறையின் பொறுப்பு DGP-யாக திரு G. வெங்கடராமன் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

5. ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>

சூரியசக்தி மின்சாரம் விவசாயிகளின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte – பிரதமர் (1)- 59 Sec. )

ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்ற உணர்வு நாட்டின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு அவசியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

நமது கலாச்சாரம் உலகின் பெரிய நகரங்களில் மட்டுமின்றி, சிறிய நகரங்களிலும் பரவியுள்ளதாக பிரதமர் கூறினார்.

(Sound Byte – பிரதமர் (2)- 47 Sec. )

பேரிடர் காலங்களில் பாதுகாப்புப்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

(Sound Byte – பிரதமர் (3)- 68 Sec. )

பொறியாளர் தினம் வரும் 15-ஆம் தேதியும், விஷ்வகர்ம ஜெயந்தி வரும் 17-ஆம் தேதியும் கொண்டாடப்படுவதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

(Sound Byte – பிரதமர் (4)- 63 Sec. )

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கோவில் நிதி சூறையாடப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒசூரில் நடைபெற்ற விநாயகர் சிலை ஊர்வலத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

(Sound Byte – எல். முருகன் – 39 Sec. )

இதற்கிடையே, விநாயகர் சதுர்த்தியையொட்டி வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் மாநிலம் முழுவதும் நீர்நிலைகளில் இன்று கரைக்கப்பட்டன.

சென்னையில் நடைபெற்ற விநாயகர் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

சொத்துவரி மற்றும் மின்கட்டண உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள ஜவுளி மற்றும் பின்னலாடை தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வை போக்க தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பால் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஏதுவாக, பிற நாடுகளுக்கான ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரை தாம் வலியுறுத்தி உள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக காவல்துறையின் பொறுப்பு DGP-யாக திரு G. வெங்கடராமன் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுவரை இப்பதவியை வகித்து வந்த திரு சங்கர் ஜிவால் ஓய்வு பெற்றதையடுத்து, திரு G. வெங்கடராமன் பொறுப்பு DGP-யாக நியமிக்கப்பட்டார்.

<<<<<<>>>>>>

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<u>(Sound Byte – செந்தாமரை கண்ணன் –27 Sec. )</u>

<<<<<<>>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டான்டு பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு சரவணன் கூறியுள்ளார்.

------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் விதிகளை மீறி விதை விற்பனை செய்த பத்து கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக விதை ஆய்வு துணை இயக்குனர் திருமதி சுஜாதா கூறியுள்ளார்.

--------------------

சேலம் ராமகிருஷ்ணா ஆசிரமத்தில் உள்ள ராமகிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகம் 72 ஆண்டுகளுக்கு பிறகு இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

--------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போதை மாத்திரைகள் வைத்திருந்தது தொடர்பாக ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

பீகாரின் Rajgir-ல் நடைபெற்ற இப்போட்டியில், ஹர்மன் பிரீத் சிங் இரண்டு கோல் அடித்தார்.

--------------

ஐக்கிய அரபு எமிரேட்டின் Fujairah-ல் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஏழாவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.

ஐந்தரை புள்ளிகளுடன் அவர் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--------------

செக் குடியரசில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Harmeet Desai இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>